# රාජ්‍ය පරිපාලන සහ ස්වදේශ කටයුතු අමාත්‍යාංශය
# அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
# MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND HOME AFFAIRS

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.
**Website : www.pubad.gov.lk**

දුරකථන / தொலைபேசி : / Telephone (94) 011-2696211-13
ෆැක්ස් / பெக்ஸ் : / Fax (94) 011-2695279
ඊ මේල් / இ-தபால் : / E - mail secretary@pubad.gov.lk


මගේ අංකය / எனது இல : / My No — COM2/TRANS/03/0015
ඔබේ අංකය / உமது இல / Your No —
දිනය / திகதி / Date — 2010.02.12

சகல அமைச்சின செயலாளர்கள,
அரசாங்க அதிபர்கள் / மாவட்ட செயலாளர்கள்
திணைக்களத்தலைவர்கள் யாவருக்கும்

<u>2010 – வருடாந்த இடமாற்றங்கள்</u>
<u>இணைந்த சேவை</u>
<u>அரச முகாமை உதவியாளர் சேவை/அலுவலகப் பணியாளர் சேவை/சாரதி சேவை</u>

மேற்படி விடயம் தொடர்பாக எனது இலக்கங்களான COM2/TRANS/03/0015, அபசே/X5/வ.இ.மா/2010, டீஎஸ்பீ/வ.கி.மா/2010/இ.சே/V மற்றும் 2009.12.10 ஆந் தேதிய கடிதங்களுக்கு தங்களின் தயவான கவனத்தைக் கோருகின்றேன்

02. பாராளுமன்ற தேர்தல் பிரகடனப்படுத்தியுள்ளதால் 2010 சனவரி 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட, 2010.01.01 ஆந் திகதி தொடக்கம் 2010.05.01 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு இருந்த 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றங்கள் 2010.05.03 ஆந் திகதி தொடக்கமும் 2010.05.03 ஆந் திகதி தொடக்கம் 2010.06.01 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்குரியதாக இருந்த 2010 ஆம் ஆண்டுக்கான இடமாற்றங்கள் 2010.06.01 ஆந் திகதி தொடக்கமும் நடைமுறைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். அதன் பிரகாரம் தங்கள் அமைச்சு/திணைக்களம்/நிறுவனம் ஆகியவற்றில் பணியாற்றும் இடமாற்றங்கள் பெற்றுள்ள அலுவலர்கள் உரிய திகதியில் புதிய சேவை நிலையங்களில் கடமைகளை பொறுப்பேற்பதற்கு முடியுமானவாறு விடுவிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

03. வருடாந்த இடமாற்றங்களின் கீழ் நான் வழங்கியுள்ள இடமாற்ற கட்டளைகளுக்கு மேலதிகமாக அமைச்சு அல்லது திணைக்களத்து உள்ளக இடமாற்ற கட்டளைகளின் கீழ் ஏதேனுமொரு அலுவலருக்கு இடமாற்றம் கிடைக்கப் பெற்றிருப்பினும் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தின் வருடாந்த இடமாற்ற கட்டளைகளுக்கு அமைவாக அவை நடைமுறைப்படுத்தல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. மேலும் உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தின் கடமைகளைப் பொறுப்பேற்க கூடியவாறு தற்போது இடமாற்ற கட்டளைப் பெற்றுள்ள அலுவலர்களை பதிலாள் வரும் வரை தொடர்ந்தும் அலுவலகத்தில் வைத்திருக்காது உங்களது அலுவலகத்திலிருந்து விடுவிக்கும் படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

பீ.பி.பி.எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர்
நாயகம்.